செ.வெ.எண். 35/ஜூன் நாள்: 15.06.2016

# பத்திரிக்கைச் செய்தி







தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற வருவாய் தீர்வாய (ஜமாபந்தி) கணக்கு முடிக்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (15.06.2016) நடைபெற்றது.

தருமபுரி மாவட்டத்திற்குட்பட்ட 7 வட்டங்களில் 15.06.2016 முதல் தொடங்கி 16.06.2016, 21.06.2016 மற்றும் 22.06.2016 ஆகிய நாட்களில் வருவாய் தீர்வாய (ஜமாபந்தி) கணக்கு முடிக்கும் நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற உள்ளது.

பென்னாகரம் வட்டத்திற்கான வருவாய் தீர்வாய அலுவலரான மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு பென்னாகரம் உள்வட்டத்திற்குட்பட்ட கூத்தப்பாடி, அளேபுரம், அஞ்சேஅள்ளி, ரங்காபுரம், சிகரலஅள்ளி, சத்தியநாதபுரம், பருவதனஅள்ளி, பென்னாகரம், பேயல்மரி, செங்கானூர், கூ.குட்டமருதஅள்ளி ஆகிய கிராமங்களுக்குட்பட்ட பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை கேட்டு 113 மனுக்களும், புதிய குடும்ப அட்டை கேட்டு 21 மனுக்களும், பட்டா மாற்றம் கோரி 36 மனுக்களும், இலவச வீட்டுமனை பட்டா 17 மனுக்களும், இதர கோரிக்கை மனுக்கள் 7 என ஆக மொத்தம் 194 மனுக்கள் மாவட்ட ஆட்சியரிடம் பொதுமக்கள் வழங்கினார்கள். பெறப்பட்ட மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு உடனடி தீர்வு காண வேண்டுமென சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார்.

முன்னதாக குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் தொடர்பாக விண்ணப்பித்திருந்த 67 நபர்களுக்கு திருத்தம் செய்த குடும்ப அட்டையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பென்னாகரம் வட்டாட்சியர் திரு.எம்.ரவிச்சந்திரன், அலுவலக மேலாளர் நீதியியல் திருமதி. லதா, ஆதிதிராவிடர் நலத்துறை தனி வட்டாட்சியர் திரு. செந்திலரசன், துணை வட்டாட்சியர்கள் திரு. செல்வம், திரு. கருணாநிதி, திரு. சுகுமார், பாலமுருகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி.